OFFICE OF THE REGISTRAR ... MADRAS
23 JUN 1933

# வாலி வதை

# A Critical Study of Kamban

by

**V. V. Srinivasa Chariar, B. A., B. L.,**
*Advocate, Tinnevelly*

With a Foreword in English by
**K. S. Ramasamy Sastrial,**
*...rict and Sessions Judge, Ramnad at Madura and*

Another in Tamil by
**...mahopadhyaya Pandit V. SWAMINATHA IYER,**
*Madras*

...OTTAH PRINTING PRESS

1933

FKA,R:5
N33
1300

OFFICE OF THE REGISTRAR
23 JUN 1933

# FOREWORD

---

I feel honoured by the request of my friend Mr. V. V. Srinivasa Chariar to write a foreword to his learned brochure on an ancient controversy which has received an original and illuminating treatment at his hands. He is a true devotee and a profound Tamil scholar and a person steeped in the best and most refined Hindu culture to his finger tips. What such a man has to say on such a topic must be of absorbing interest.

I have in my own way entered into the Vali episode and arrived, as the result of my investigation and reflection, at the same conclusions as the learned author. Those who lose their way in the episode and find no end in wandering mazes lost are the persons to whom the flickering flame of ordinary ratiocination seems brighter than the sun of the faith-illumined reason of Godlike men. In Valmiki's divine poem it is stated that Brahma endowed Valmiki with the power of knowing not only the outward events of Sri Rama's life such as his contemporaries knew but also the plan and purpose of the Will Divine. It is only when we have induced within ourselves a similar power and vision that the true inwardness of the actions of God Incarnate as Perfect man will become self-revealed in our souls.

171300



The fact is that the significance of every incident in every life depends on our angle of vision and perception. When we view things from our lowest and most selfish level the act which we consider and estimate appeals to us in a way different from the manner of its appeal to us when we look at it from a higher and diviner level. Poetry is like shot silk full of many glancing colours and its beauty and appeal depend upon the level at which it is held in relation to the eye and to the sunlight. The highest ethics teaches us that the motive is always more important than the act. When we have purgated our natures and rise to our highest level and see a human action in the full radiance of the m[illegible] inspiring it, we canget the fullest vision [illegible] true purport and value and significance.

Let me illustrate. One writer of apologia for Sri Rama tells us that as Sri Rama's wife had been abducted he sought the aid of Sugriva who was in a similar plight. Another ingenious mind would tell is that as Sri Rama was born in the solar line and as Sugriva was the son of the Sun-God he befri ended the latter and killed Vali. A third *savant* would tell us that Sri Rama did so to detach Vibhishana from his loyalty to Ravana and bring him to his side in the expectation of a repetition of the transfer of an elder brother's crown to a younger brother. A fourth analyst of motives tells us that Sri Rama concealed himself and killed Val

C-1/ACB, I(5) NB3

because he had already given the kingdom of Kishkindha to Sugriva and would be in a dilemma if Vali also fell at his feet and sought his grace.

These suggestions emanate from the lower levels of our nature. As in our ordinary selfish moods we would be likely swayed by such moods and considerations, we view Sri Rama's action from such angles of vision, But the essential truth lies elsewhere. Sri Rama is God incarnate as Perfect Man. He has no selfish ends to gain and is not actuated by our ordinary selfish vulgar human motives. He is Incarnate Dharma (*vigrahavan dharmah*). He is selfless and pure like a Rishi (*Vidhi mam rishibit tulyam kevalam dharmam asritam*). An ordinary selfish king in trouble would have rather sought the aid of Vali who had taken Ravana prisoner and who was the strongest man then alive rather than of the helpless exile Sugriva. The whole aim of Sri Rama's incarnation was to live and teach the perfect life. He taught this by showing need for proper choices amidst the tangled confusions of life and the contradictory claims which different alternatives make upon our acceptance.

The wonder is that while Tara and Angada and even Vali were satisfied with the property of Sri Rama's act, the modern critics to whom the whole story is but a legend and who are not

hurt by Vali's misfortune refuse to be satisfied and are keeping up a ceaseless campaign against the fair name of Sri Rama. Sri Rama, who put aside Janaki to plcate public opinion and to prevent any laxity creeping in to public morals was the last person to flout public opinion or to move from the narrow path of rectitude.

Valmiki has aimed at depicting a perfect man who knows and follows and enforces *dharma*, who loves all men, who is of noble nature (*Arya*), and who treats all alike (*Sarvasama*.) Hence his exposition of Sri Rama's motives as put by him into Sri Rama's mouth should be carefully studied and scrutinised by us. As Vali described himself as a monk Sri Rama says that in that case there was n question of righteousness or unrighteousness in hunting. But this was not a case of an ordinary monkey. Here was a monkey who could speak and who could rule a kingdom and who knew Right and Wrong. So, Sri Rama takes his words to a higher attitude of expression. He says that Vali had fallen under the sway of incestuous lust and abandoned the path of righteous sovereignty and that he has, as the judge appointed by Bharata who was the ruler of the land, to punish a transgresser of the eternal law. He says further that a judge who punishes an evildoer does not incur sin and that a culprit by undergoing punishment is freed from his sin. He then raises his words to a yet higher

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1933
MADRAS

standpoint and tells Vali that the path of the righteous is subtle and is not easy of comprehension. What is this highest angle of vision?

The highest lessons of Sri Rama's life are purity of life and Succour of the oppressed (*Vratam Mama*). That was the main object of, his incarnation as a perfect man. Vali broke both tbose great laws. He seized his younger brother's wife and he broke the supreme law of *Saranagatha Samrakshana* Protection of the seeker of refuge by trying to kill Sugriva who sought his forgiveness and protection. Sri Rama could forgive other transgressions but he would not forgive the transgressions of his highest laws of life.

It may then be asked why Sri Rama concealed himself and killed Vali. One possible explanation is that it was not a case of battle but of the carrying out of a judicial sentence which could be effectuated in the presence or absence of the judge. But in Valmiki's work Sri Rama is described as saying that he killed Vali in battle (*Tvam nihatoyuddhe*). Further it may be argued that Vali was only a criminal and not an outlaw and that hence a judge should face the criminal and not remain in hiding. It may be said also that Vali was a king and was not Sri Rama's subject and that hence the municipal law could not apply to him. If the reply is that the whole world was subject to Bharata's rule, it may be asked why Ravana

was not dealt with as a criminal without resort to invasion and war. Another epxlanation is that Vali got a boon that he would get, in addition to his own great strength, half the prowess of the opponent fighting him to his face and that this was ensured to him by the golden garland given to him by God Indra. But Sri Rama is the infinite Narayana and is *Satyaparakrama*. What is the effect of half of such infinite strength going to Vali? Infinity cannot be rendered ineffectual by such arithmetical apportion ment which would have significance only in regard to finite magnitudes. The only correct explanation is that all minor Gods being ensouled by the Supreme Lord and being His manifestations, He graciously and voluntarily respects their boons and killed Vali by standing away from the field of his vision. The Lord found a subtle way out of the calamity caused by Lord Siva's boon to Bhasmasura. Nay, he became a man to respect Brahma's boon to Ravana. Valmiki does not expressly refer to such a boon to Vali. But he says that even after Vali's being hit by Sri Rama the golden garland kept up his life and radiance and beauty and that he died after he hande it over to Sugriva.

Thus we have to view the situation from an ascending grade of steps. Let us take the explanation that Sri Rama hid himself and killed Vali because if Vali fell at Sri Rama's

feet Sri Rama would not be able to give Kishikindha to Sugriva. This is a minor point of view. The author points out that Vali being of heroic nature would not sue for grace to save his life. Even if he did so Sri Rama could create ancther Kishkindha for him or give him the throne of Ayodhya. Or it may be that, like Dhruva, Vali might have preferred adoration of Sri Rama as being superior to a crown. The above explanation is thus one from a lower standpoint aed not from the highest standpoint.

It may be asked why Vali alone opposed Sri Rama and His Law while no other monkey did so and even though Vali was the son of the King of the Gods whereas the other monkeys were incarnations of the lesser Gods. In my opinion this is the really difficult point. Indra was helping Sri Rama all along. Why did his son alone not do so? I rather think that there is a subtle truth here Lanka with its teeming millions lay under the doom of death as the result of Ravana's unrighteous act. The innocent were likely to suffer along with the guilty. Who was to point the way of wisdom to, Ravana and save a whole kingdom. If Vali exemplified by suffering death the penalties of sinful lust and sinful breach of the law of mercy, Ravana who was a puny being compared to Vali might come to his senses, and he and his kingdom might be saved from the

impending doom. Vali's losing his life was a supreme act of herosim—higher even than the laying down of life for one's own motherland. Sita Devi herself went to Lanka leaving Sri Rama's side. Such was her mission of boundless mercy—to give by her proximity and presence to Ravana and his supporters a chance of becoming sinless and pure and winning Sri Rama's Grace. Was there a similar subtle and unknown and unrevealed motive behind Vali's action and fate?

I must stop here. I am not writing a book but a foreword. Mr. V. V. Srinivasa Chariar's brochure is of absorbing interest and is replete with learning, I wish it wide public appreciation and hope that it is the precursor of a great study of Kamban's genius at his hands.

MADURA, 22nd February 1933 — **K S. Ramaswami Sastri,**
*District Judge.*

---

ஸ்ரீமத் இராமாயணத்தில் கூறப்படும் வாலிவதை, நியாயமுள்ளதென்று சிலரும் நியாயமில்லதென்று சிலரும் சொல்வதுண்டு. அது நியாயமே என்பதைச் சில அறிஞர்கள் காரணங்காட்டி நிறுவியிருக்கின்றார்கள். திருநெல்வேலி அட்வொகேட் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள் பி. ஏ., பி. எல். இவ்விஷயத்தை ஆராய்ந்து எழுதிய 'வாலி வதை' என்னும் அரிய நூலை முற்றும் படித்தறிந்தேன் இதில், கம்பராமாயணம், வானமீகி ராமாயணம், திவ்யப்பிரபந்த வியாக்கியானங்கள் முதலிய பலநூல்களிற் கண்ட செய்திகளை எடுத்து ஆராய்ச்சி செய்து வடமொழி தென்மொழி ஆங்கில மேற்கோள்களுடன் தக்க காரணங்களைக் காட்டி வாலிவதை நியாயமுள்ளதென்பதை நிறுவியிருத்தல் அவர்களுடைய வாதத்திறமையைக் காட்டுகின்றது. இவ்வாராய்ச்சிநூல் அறிஞர்கள் படித்து இன்புறுதற் குறியதென்பது எனது கருத்து.

இங்ஙனம்
மஹாமஹோபாத்யாயபண்டிதர் வே. சாமிநாதையர்
27—2—1933.

ஸ்ரீ

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம :

# வாலி வதை

மகாராஜருடன் அங்கிசான்றாய் உறவினைத் துணிந்து அவருடைய குறைகளை முடித்து கிஷ்கிந்தையை முடி சூட்டு வதாக வாக்குத்தத்தம் செய்தது காரணமாக வாலியை பெருமாள் சம்ஹாரம் செய்தருளினார் என்ற விபரம் யாவரும் அறிந்ததே. மகாவீரனாகிய வாலியை ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் மறைந்து நின்று வதைசெய்தது தர்ம சாஸ்திரத்தின்பாற்படாதென்றும், அவ்வதையை தேவ பாஷையினிக் கதை செய்த ஸ்ரீ வால்மீகி நாதனும் தமிழிற் பெருங்காப்பியமாகப் பாடியருளிய கல்வியிற் பெரியாரும் சமாதானம் கூற முடியாது நின்றனர் என்றும், ஆகவே காகில் சொற்றத்திராகவன் வீரம் இவ்விடம் மாசுண்டதென்றும் பண்டிதர் பாமரர் கூறிப்போவர். இவ்வுலகத்தில் தோன்றிய ஒவ்வொரு சேதனனும் விஷய ஆராய்ச்சியின்றி சுலபமாய் பாபம் தேடிக் கொள்வதற்கு ஹேதுவாய் நிற்பது இந்த விருத்தாந்தம் என்று சொல்லத் தட்டில்லை. குற்றங் கூறுவதையே கோட்பாடாகக் கொண்டார் ஸ்ரீ ராகவனையும் விட்டிலர் என்று ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனும் அருளிச்செய்வர். ஆகவே இவ் விஷயத்தில் கவிச்சக்ரவர்த்தியார் கொள்கை இன்னதென்பதை ஆராய்ச்சி செய்வது உசிதமாகும்.

கபந்தன், சபரி முதலானோர் "செயலைச் செற்றபகை தெறுவான் தெரிந்து அயலைப்பற்றித் துணையமைய" வேண்டுமென்று கூறி அவ்விதம் துணையாகக் கோடற்குரியான் சுக்ரீவன் என்று முடித்தார்கள். அதை உட்கொண்டு ரகுவீரர்கள் ரிசியமூக பர்வதத்தை நோக்கி எழுந்தருளினார்கள். இவர்

கள் வ்ருதலைக்கண்ணுற்று இவர்கள் வாலி ஏவலால்வரும் பகைஞர் என்று சுக்ரீவன் அச்சமுற்று ஹனுமானை அனுப்புகிறான். அந்த நவவியாகர்ண பண்டிதனும் மகா வீரர்களது வரலாற்றைத்தெளிந்து இவர்கள் சுக்ரீவனுடன் வலியசக்யம் செய்யவருகிற சந்தோஷ சமாசாரத்தில் புளகாங்கிதனாய் மகாராஜரிடம் இதை விக்ஞாபனம் செய்கிறான்.

"புயலைப்பற்று மப்பொங்கரி போக்கியோர்
முயலைப்பற்றுவதென்ன முயற்சியோ"

என்று சங்கிக்கக்கிடந்த பாவத்திற்கு இவிடம் நாம் உத்தரம் தெரிந்துகொள்கிறோம். அதை

"நீயையாதவ மிழைத்துடைமாயால் நெடுமனந்
தாயையாவுடைமையா லுறவினைத்துணிகுவார்"

என்று ஆஞ்சனேயன் வாயிலே போட்டுச் சொல்லுகிறார் கம்பர். பின்னர் "மாய வரக்கனை வாலிற்பற்றி இவன் கட்டுந்து குரக்கியற்றொழிலும் காட்ட" வல்லவாலியின் பிரதாபத்தையும் வரங்களையும் போறின் ஆற்றலையும் வாயு புத்திரனிடம் கேட்டும் பெருமாள் மனசில் இவனைக் கைக்கொள்வதைவிட்டு சுக்ரீவனை சிநேகம் செய்தது தவறு என்று படவில்லை. இயற்கை அமைப்பிலே பெருமாள் மகா பாபிகளுடன் சிநேகம்செய்ய நேரான் என்று கம்பர் இவ்விடம் சுட்டிக்காட்டிச் செல்கிறார். இதுவே கபந்தனது அபிப்பிராயமாதலை,

"ஆயது செய்கையென்பதறத்துறை நெறியினெண்ணித்
தீயவர்ச்சேர்க்கிலாது செல்வியோர்ச் சேர்த்துச்செய்தல்"

என்று முன்காண்டத்தில் விளக்கியுள்ளார் கவியும். அபயம் என்ற பொழுதத்தே அபயதானம் ஏதலேகடப்பாடாகக் கொண்ட பிரபுவும் சுக்ரீவன் தன் திருவடிகளில் சரணம் புகவும்

"உன்றனக்குரியவின்ப துன்பங்களுள்ள முன்னாள்
சென்றனபோகமேல்வந்து றுவனதீர்ப் பலன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேரென என்று" நேர்ந்தான்

என்றார் கவிசிரேஷ்டரும்.

சுக்ரீவனைக் கொல்வதாகக் கொண்ட துவேஷத்திற்கும் அவன் ஸ்திரீயை பரிக்கிரகம் செய்ததற்கும் வாலிக்குயா தொரு நியாயமான முகாந்திரமுமில்லை யென்பது, இவ்வர லாற்றை சாமானியமாகப் படித்தோரும் தெளிந்துகொள்ளல் இயல்பே. எந்த நிலைமையிலும் சுக்ரீவன்பால் லவலேசமாயி னும் குற்றங்கூற ஒருவரும் துணியார் என்பது முடிந்த பக்ஷமே. பெருமாளும் மகாராஜரும் சிநேகம்செய்த பின் னரே வாலியின் வரலாறு சவிஸ்தாரமாக ஆஞ்சநேயன் சொல்லி பிரபுவும் கேட்கிறான். தன் இளையவன் தாரத்தை வாலியும் விரும்பின சமாசாரம் கேட்டவுடன்,

"வையநுங்கியவாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்யதாமரையாம் பலம்போதெனச் சிவந்த"

என்று கூறி

"ஈரநீங்கிய சிற்றவை சொற்றனளென்ன
ஆரம்வீங்கு தோட்டம்பிக்குத் தன்னரசுரிமைப்
பாரமீந்தவன் பரிவில னொருவன்றனிளையோன்
தாரம்வௌவினனென்ற சொற்றரிக்குமாறுளதோ"

என்று பெருமாள் வாலியின் கொடுமையான பாபங்களைக் கேட்டு சகிக்கமுடியாது நின்ற தன்மையைக் காட்டியுள்ளார் கவியும். பின்னர் பெருமாள் வாலியை வதைப்பதாகச் சூளுற்ற பாசுரமும் இங்கே காட்டல் அவசியமாம்.

"உலகமேழினோடேழும் வந்தவனுயிர்க்குதவி
விலகுமென்னினும் வில்லுடைய வாளியின் வீட்டித்
தலைமையோடு நின்றாரமுமுனக்கின்று தருவேன்
புலமையோய வனுறை விடங்காட்டென்று புகன்றான்.

வாலியை சம்ஹரிப்பதற்கு அவனுறைவிடம் சுக்ரீவன் காட்டலேகுறை என்று க்ஷணிகமாத்திரமும் காலந்தாழ்க்க ஸ்ரீ ராகவன் பொறுதிருந்த வேகம் இப்பாசுரத்தினாலே போதரும். இப்பால் பெருமாள் ஆக்ஞைப்படி சுக்ரீவனால் வலிந்து அறைகூவி வாலியுற்றவனும் சகோதரர்களுக்குள்

கடமையாய்ப் போர்நிகழ்ந்து ஸ்ரீராமனம்பால் வாலி கீழே விழுந்ததன்மை யாவரும் அறிந்ததே. தன்மார்பில் ராமபாணம் ஊடுருவிச்சென்று உயிர்போக்குவதற்காக நிற்கும் நிலைமையை நோக்கி இவனை "ஏசுவான் இயம்பின" பாசுரங்களும் இவிடத்திலே ஞாபகத்திற்குவரலாம். இருவர்களுக்கும் நடந்த சம்பாஷணையில் வாலியின் பால் பெருமாளும் கீழே கண்ட குற்றங்களை ஏற்படுத்துகிற விபரமும் நாம் பார்க்கிறோம்.

1. மாயாவியை சம்ஹரிப்பதாக பிலத்துவாரம்வழிச் சென்ற வாலி 14 ருதுக்கள் கழிந்தும் வாராதுநின்ற காரணத்தால் அவன் இறந்துபட்டான் என்று நினைத்து வானர சிரேஷ்டரும் மந்திரிகளும் சேனைத் தலைவரும் வற்புறுத்திய தனால்மட்டும் சுக்ரீவன் தன் கொள்கைக்கு மாருக ராஜ்ய பாரம் வகித்தான் என்று விபரம் கேட்டும் மாயாவியைக் கொன்று பிலத்தினின்றும் திரும்பியவாலி தம்பியைக் "கொல்லலுற்றதும், கோதவற்கில்லை யென்பதுணர்ந்து மிரங்காது" நின்றதும்.

2. பின்னர் வாலிபால் தான் தோற்ற தன்மையை ஒப்புக்கொண்டு சுக்ரீவன் அஞ்சலியஸ்தனாய்த் தன்னைக் காப்பாற்றும்படி சரணம்புகுந்து பிரார்த்தித்தும் இவன் கேளாது கூற்றமுண்ணக் கொடுப்பான் துணிந்தது.

3. எந்த நிலைமையிலும் தம்பி என்றிரங்காது புறங் காட்டி ஓடிய இவனை வதை செய்ய எத்தனித்தது.

4. கடைசியாக தேகபலத்தினாலும், வரச்செருக்கினாலும் அறந்திறம்பி, தன் தம்பியின் தருமபத்தினியைப் பரிக்கிரகம் செய்தது. இக்குற்றங்களை மிகவும் பொறுத்ததுடன் (categorical) ஆக பிரபு கோடிகரிக்கிருன். இவைகளுக்குப் பதில்கூற எத்தனித்த வாலியும் முதல் மூன்று குற்றங்களுக்கு சமாதானம் கூறவே முடியாமல் நிற்கிருன், கடைசியாக ருமையைப் பெண்டாண்ட தோஷத்திற்குத் தங்களது

வானரஜாதிப்பிரயுக்தமாக ஏற்பட்ட ஆசரணைகளைக் காரணங் காட்டி முடிக்கிறான். இதற்கு மிகவும் ஆச்சரியமான காரணங்களுடன் பெருமாளும் ஆக்ஷேபணை கூறிநிற்கும் பாசுரங்கள் மிகவும் அழகு வாய்ந்துள்ளன. கவிச்சக்கிரவர்த்தியார் இங்கே எடுத்துக்காட்டிய வழி முதனூலிற் காணப்படாததாய் நவீன நாகரீக பந்தாவில் அமைந்ததென்றும், உயரீய உத்தம தர்ம சாஸ்திரங்களின் நுட்பமான பொருள்களை (highly evolved ethical and moral principles) அடிப்படையாகக்கொண்டு பிறந்தது என்றும், வித்யார்த்திகள் மனசில் ஆற்றவொண்ணா யின்பத்தைப் பிரப்பிவித்து பரவசமாக்குமியல்பினது என்றும் பெரியோர் கூறுநிற்பர். ஸர்வேசுரன் பக்கலிலே ஸர்வார்த்த கிரகணம் பண்ணின திருமங்கையாழ்வார் திருக்கண்ணமங்கையில் கோயில்கொண்டிருக்கும் பக்தவத்ஸலப்பெருமானை மங்களாசாசனம் செய்தவிடத்து அவன் விஷயமாய்த்தான் பாடின பாசுரங்களில்தானே ஆழங்கால் பட்டவராய் அவைகளின் யோக்யதையை சேதனர்கள் அனுபவித்து உஜ்ஜீவித்தது நிற்க

"மெய்ம்மை சொல்லின் வெண்சங்கமொன்றேந்திய
கண்ண! நின்றனக்கும்
குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே"

என்று ஸர்வக்ஞனை அப்பரம்பொருளையும் அப்பாசுரங்களைப் பயின்று சிரச்கம்பம் செய்யுமாறு கோறின கவித்திறம் இவிடம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அநேககாலம் கொடுந்தபசுபண்ணி அருமையாய் பெருமாளை ஸேவிக்கப்பெற்றும் அப்புண்ய புருஷனை வாயார வாழ்த்துதற்குச் சக்தியற்றவனாய் "ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்" பேசமாட்டாது துருவன் இடர்ப்பட்டு நிற்கவும், அவனுக்கு ஞானபாகத்தை ஊட்டி வாய்திறந்து தன்னைப்பல்லாண்டு பாடுவதற்காக ஞான பிரதானமான ஸ்ரீ பாஞ்ச ஜன்னியாழ்வானை அப்பரம பக்தன் சிரசிலே வைத்தருளினான் எம்பெருமான் என்பதும், அதுகொண்டு அத்துருவனும் "நாராயணா வென்னா நாவென்ன

நாவே" என்ற கருத்திற்கிணங்க பெருமாளை வாசாமகோசரமாக வாழ்த்தினன் என்றும் ஸ்ரீ பாகவதத்திலே நாம் பார்க்கிறோம். ஞானத்திற்கு அதிஷ்டானமாய் ஊமையையும் பேசச் செய்து பாரமார்த்திக விஷயத்திலே புத்தியைப் புகட்டுமியல்பினதான பிரணவாகாரமான வெண்சங்கமொன்றேந்தி நீ நிற்கவும், "நீயும் சிஷ்யக்கிரமத்திலே என் கவிநலம் கற்கலாம்" என்று திருவுள்ளத்திற்கொண்டு அவன் வெண்சங்கொன்றேந்தி நிற்கும் கோலத்தையே காட்டி சம்போதனம் செய்கிறார் திருமங்கை மன்னனும். அவ்விதமே திவ்யமான கருத்துக்களுடன் பாசுரங்கள் அமைத்து அவற்றைத் தென்சொற்கடந்தானாகிய பெருமாள் கற்கும்படிக்கும், அவனையேகொண்டு வாலிக்கு உத்தரம் கூறும்படிச்கும் திட்டஞ்செய்து அவ் வாலிக்குப் பதில்சொல்வதற்கு சாத்தியமில்லாது பரிதவித்து நிற்கும் ஸ்திதியை ஏற்படுத்தித் கவிச்சக்ரவர்த்தியார் ஆவலிப்புக் கொண்டனரோ என்று வியக்கும்படி கிடக்கிறது இவர் கவியின்றிறம். தர்ம சாஸ்திர ஆராய்ச்சியினாலும், நன்று தீதென்று பகுத்தறியும் அறிவினாலும், தக்கவின்ன, தகாதனவின்ன என்று ஒக்க உன்னும் உணர்வினாலும், தெய்வப்பிறப்பில் தோன்றி நின்ற பெருமையாலும், ருத்ரன்பால் கொடிய தபசு பண்ணிப் பெற்ற நல்வரவுண்மையாலும் வாலி ஏனைய திர்யக்குக்களுடன் சேர்க்கப்படாது நிற்கும் உயர்ந்த பதவியை எடுத்துக் காட்டி அவன் பெருமாளுடன் வாதாடின சொற்றிறம் பொருட்டிறத்திலிருந்தே இவன்தான் "ருமை" யைப் பெண்டாண்ட பாபத்தினின்றும் தப்புவதற்குக்காட்டிய மிருக ஒழுக்கங்கள் இவனுக்கு ஒருவிதத்திலும் பொருந்தாவென்றும் சித்தாந்தம் செய்கிறான் பிரபுவும். ஒருவன் எடுத்த சரீரம்பற்றி அவன் செய்கையை சரி என்றும் தப்புஎன்றும் தீர்மானித்தல் சால்புடைத்தன்று என்றும், ஞானம்பற்றியே தீர்மானித்தல் பெரியோர்கள் கடமையென்றும், ஞானமில்லாதோர் உயர்தர மக்கட்பிறிவியிற்றோன்றினும் விலங்காவர் என்றும், விலங்காய் சரீரம் படைத்தோர் தர்மசாஸ்திர ஆராய்ச்சியுடன் தோன்றி

7-ம் பக்கம் கடைசிவரிக்குப் பின்

சகோதரர்களுக்குள் போர்க்களமாய்ப் பிறந்தது வாலிக்குக் கொலைக்களமாய் முடிந்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUN 1933

7

நின்ருல் தெய்வப்பிறப்பாகக் கருதப்படுவார் என்றும், மானிடப் பிறவியிற் பிறவா திருந்தும் எருவைக் கரசனும் ஜடாயு பிராட்டியின் பொருட்டாகத் தன்னுயிர் புகழ்க்குவிற்று தெய்வ மரணம் பெற்ற தன்மையையும் கஜேந்திராழ்வான் ஜகத்காரண வஸ்துவை பிராணன் போக ஹேதுவான துன்பம் நேர்ந்துழி அழைத்து மோக்ஷம்பெற்ற விருத்தாந்தங்களையும் போற்றிப்பாராட்டி முடிக்கிருன். இந்த வழக்கிற்கு வாலியால் எவ்விதத்திலும் சமாதானம் கூற முடியவில்லை என்று எற்கனவே குறிப்பிட்டோம். ஆனுல் "நேருமன்று மறைந்து நிராயு தன் மார்பில்" எய்ததற்கு ஸ்ரீ ராகவன் ஒரு சமாதானமும் கூறவில்லை என்பது உண்மையே.

இருவர்களுக்கும் நேர்ந்த பூர்வபக்ஷசித்தாந்தத்திலிருந்து வாலி செய்த ஒவ்வொரு குற்றமும் தர்மசாஸ்திர வழக்கின்படி அவனுக்கு மரண தண்டனை விதிப்பதற்கேற்ற கொடுமையுடன் கூடினது என்று எற்படுகின்றது. இதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர், ஆனுல் மறைந்து நின்று நிராயுதன் மார்பில் பாணம் போட்டுக் கொன்றதற்கு என்ன சமாதானம் என்று கேட்கின்றனர்,

ராமனுக்கும் வாலிக்கும் நேர்ந்தது யுத்தம் என்று கொள்ளல் ஒருவிதத்திலும் பொருத்தமுடைத்தன்று. தருமவழி நின்றும் தவறி மகா பாபங்களைச் செய்த குற்றவாளிகளின் கோஷ்டியில் சேர்ந்து நிற்கிருன் வாலி. இவன் தர்மசாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவனுதலாலே இவன் செய்த குற்றங்கள் மிகவும் கிரௌர்யமும் கொடுமையும் வாய்ந்தவை என்று சொல்லத்தட்டில்லை. (aggravated form of the offences) ஆய் எற்படுகின்றன. அக்காலத்திய சட்டதிட்டங்களுக்கு விரோதமாய் தருமசாஸ்திரங்களினின்றும் தவறி பிரபலமான குற்றங்கள் செய்துநின்றனனுக வாலியை "outlaw" என்றே கருதல்வேண்டும். அவனை அவ்விதமே கருதி மரண தண்டனையை விதித்தனன் உலகுக்குச் சக்ரவர்த்தியாய்ப் பிறந்தானெரு மூர்த்தி. அத்தண்டனையை விதித்து அதைத் தானே நின்று கொலைக்களத்திலே நிறைவேற்றினுன்.

"நஞ்ச மன்னவரை நலிந்தாலது
வஞ்சமில்லை மனுவழக்காதலான்"

This was a case of hunting down an outlaw and putting him to death. வாலியின் குற்றம் மரணதண்டனைக் குரியதென்றால், அத்தண்டனையை அவன் பால் நிறைவேற்றிய பாகம் குற்றம் என்று கூறல் ஒரு விதத்திலும் பொறுத்தமாகாது. மரணதண்டனை விதிக்கப் பெற்றோர் வெவ்வேறுவிதமாக அத்தண்டனையை அடைகிறார்கள். தூக்கிற் போடுவது, மின்சாரத்தின் வலிமையாற் கொல்வது, gullotine மூலம் மரணமடைவிப்பது முதலியன. நேருமன்று மறைந்து நிராயுதன் மார்பில் பாணம் போட்டது மரணதண்டனையை நிறைவேற்றிய அம்சமேயன்றி வேறன்று. தான் செய்த குற்றத்திற்கு மரணதண்டனையே உரியதென்றும், அதை மறைந்து நின்று நிறைவேற்றிய பாகம் ஒரு சிறிய அம்சம் (detail) என்றும், அக்காரணம்பற்றி அதுவும் தன்னால் மறுபடியும் ஆக்ஷேபித்துப் பிரச்னம் செய்வதற்கு உரியதன்று என்றும் நினைத்து அவ்வழியில் வாலி இறங்கினானல்லன் என்ற கருத்தோடு அவனுக்கு அந்தச்சமையம் அடைமொழி கொடுக்கவந்த கவியும் "சிறியன சிந்தியாதான்" என்று சமர்த்திக்கிறார்.

ஆனால் இந்த கட்டத்தில் வாலியின் கேழ்வியாக "அவ்வுரையமையக் கேட்ட" என்ற பாடலும் "முன்பு நின்றம்பி வந்து சரண்புக" என்ற இளையபெருமாள் உத்திரமாக ஒரு பாடலும் தோன்றுகின்றனவே என்று சந்தேகம் ஜனிக்கலாம். இக்கவிகள் கம்பரதல்ல என்றும், அம்மகாகவியின் உட்கருத்துத் தெரியாததொருவர் இடைச் செருகலாய் ஏற்படுத்தினவை என்றும் நிச்சயமாய்த் தெரிந்துகொள்வதற்கேற்ற சான்றுகள் இவ்விடமே கிடக்கின்றன.

ஸ்ரீராகவன் சமாதானம்கூறி சமர்த்தித்த பாசுரம் "மனையின் மாட்சியென்றான் மனுநீதியான்" என்று முடிந்து நிற்கிறது. இதற்கு அடுத்து நான் "இடைச் செருகல்" என்று

நினைக்கிற பாடல்கள் இரண்டும் கிடக்கின்றன. அடுத்த பாசுரமும் "கவிகுலத்தரசுமன்னனன் கட்டுரை மனத்துட் கொண்டான்" என்று துடங்குகிறது. இவிடத்தில் கண்ட "மன்னன்" என்ற பதம் "மனுநீதியான்" என்ற சொல் லில் குறிப்பிட ஸ்ரீ ராகவனையே குறிக்கும். இதை விட்டு "அவ்வுரையமையக்கேட்ட" என்ற பாடலையும் "முன்பு நின்றம்பி வந்து சரண்புக" என்ற பாடலையும் கம்ப ரால் வரையப்பட்டதாக வைத்துக்கொண்டால் "மன்னன்" என்பதற்கு "அவ்வுரையமையக்கேட்ட" என்ற பாடலிற் கண்ட "இலக்குவன்" என்று வலியப் பொருள்கொள்ளவேண் டிவருகிறது. கம்பர் ஒருவிடத்திலும் இளையபெருமாளை "மன்னன்" என்று அழைத்திலர். இந்த ஒரு ஆக்ஷேபனை மட்டுமே இப்பாசுரங்கள் இடைச்செருகல் என்றுகொள்ளப் போதுமானதென்னலாம். ஆயினும் இப்பாடல்களைச் சற்று நின்று ஆராய்ச்சி செய்தோமாகில் இவைகளைக் கல்வியிற் பெரியார் ஒருகாலத்திலும் வரைந்திரார் என்று திட்டமாய்க் கொள்ளலாம். இப்பாடல்களாற்போந்த பொருள் பின்வரு மாறு. பெருமாள் வார்த்தைகளைக்கேட்ட வாலியும் "செவ்வி யோய் நீ கூறியசுக்ஷிகள் ஒருபக்கமிருக்கட்டும். யுத்தகளத் தில் நேர்நின்று எய்யாது வேடர்களுக்கொப்பந்தம் மறைந்து என்பேரில் பாணப்பிரயோகம் செய்தது எவ்வாறு" என்று கேட்டனனாக, இளையபெருமாளும் "முன் உன் தம்பி வந்து சரணம் புகவும் உன்னை யமலோகத்திற்கு அனுப்புவதாக நேர்ந்தனன் ராமன். யுத்தத்தில் நீயும் உயிரின்பேரில் அன்பு பூண்டு பெருமாளிடம் அடைக்கலம் புகுந்தால் என்செய்வது என்று எண்ணி அண்ணலும் மறைந்து நின்று எய்தான்" என்று முடித்தான்.

இப்பாசுரங்களினால் இரண்டு பிரபல தோஷங்கள் ஏற் படுகின்றன என்பது இவற்றை உய்த்துணர்வோர் தெளிந்து கொள்ளல் இயல்பே. ஒன்று பொதுவாக மகாவீரர்களது மனப்பாங்கை கவனியாது நிற்றல். இரண்டு பெருமாள்

கைக்கொண்ட சருணாகதி தர்மத்தின் சூக்ஷமத்தை ஆரா யாது நிற்றல். ராமாயணத்தில் தோன்றிநிற்கும் வீரர்கள் வானரராயினும் சரி, அரக்கராயினும் சரி, யுத்தம் நேர்ந்துழி உயிரின்பேரில் ஆசைகொண்டு சத்துருவினிடம் சரணம்புகும் மனப்பாங்குடையரல்லர். இது இவர்கள் வீரத்தன்மைக்கு இழிவாம் என்பது வெளிப்படை. பிராட்டியை ஸ்ரீராகவன் திருவடிகளில் சமர்ப்பிவித்து, அவனைச் சரணம்புக்கு அபராத க்ஷாபணம் செய்துகொள்ளுமாறு ஹிதம் சொன்ன ஸ்வஜனங் களின் வார்த்தைகளை அங்கீகரியாது

"நாசம் வந்துற்றபோதும் நல்லதோர் பகையைப்
பெற்றேன்"

என்றும்

"மொக்குளென்ன ஆக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ இருபது திண்டோளுண்டாய்'

என்றும்

"பொன்றுதல் எக்காலத்தும் தவிருமோ பொது
மைத்தன்றே
இன்றுளார் நாளை மாள்வர் புகழுக்குமிறுதியுண்டோ"

என்று ராவணன் வாயிலும், விபீஷணாழ்வானையிட்டும், பெரு மாள் நேரில் கண்டவிடத்தும் தன்னை சரணமடையும்படி கோறிய சமையத்திலும் கும்பகர்ணன் வாயில்

"கும்பிட்டு வாழ்கிலேன் யான் கூற்றையுமாடல்
கொண்டேன்"

என்றும்

"புலையுறு மரணமெய்தல் எனக்கது புகழதேயால்"

என்றும் "சேவகர் சடனோராய்" "தக்கது புகன்றிலை'' போ லும் என்றும் வீர வசனங்களை போட்டுச்சொன்ன கம்பநாடர் ராவணனை அலக்ஷியமாக வாலிற்கட்டுப்போந்து வாகைசூடிய மஹாவீரனும் வாலி நச்வரமான சரீரத்தில் அன்பு பூண்டு சரணம்புகத் துணிவான் என்று இளையபெருமாள் சங்கிக்கவும்

இடங்கொடார். தன் நாடகத்தில் தோன்றும் நாடகப் பாத்திரங்களில் மகா வீரர்களாயமைந்தவரை, உயரிய உத்தம வீர லக்ஷணங்களுடன் அமைத்துக்காட்டும் கவிச்சக்கிரவர்த்தியார் இவ்விதம் எழுதினர் என்பது ஒருவிதத்திலும் பொருந்தாது.

இது நிற்க. இரண்டாவது சொன்னதோஷத்தைச் சற்று கவனிப்போம். ஸ்ரீமத்ராமாயணம் சரணுகதி சாஸ்திரமென்றே அழைக்கப்பெறுகின்றது. அந்நூல் கற்பிக்கும் பாரமார்த்திக விஷயங்களில் இது முதன்மையானதென்பது பூர்வாசாரியர்கள் நிர்வாகம். சரணுகதியை ஒரு வியாஜமாகக்கொண்டு தன்னை விபீஷணுழ்வான் சுக்ரீவாதிகள் துணிந்தபடி, கொல்லும்படி நேர்ந்தாலும் அதையும் அதுபோன்ற பின்வரும் ஏனைய சாதக பாதகங்களையும் எதிர்பாராது சரணம் புகுந்தவனை அங்கீகரிப்பதே தன் முக்கிய கோட்பாடு என்று துணிந்து அனுஷ்டித்துக்காட்டின சத்திய சங்கல்பனுன பெருமாளின் கொள்கையை முற்றிலும் நிராகரித்து நிற்பதன்றோ இப்பாட்டின் பாவம்.

"வெற்றியே பெறுக தோற்க வீயவீயாது வாழ்க
பற்றுதலன்றியுண்டோ புகலெலமைப்பகர் இன்றுனே"

என்றல்லவோ "தன் விரதத்தைப்" பெருமாள் போற்றி நிற்பது. பத்து மாசகாலம் ஸஹதர்ம சாரிணியான ஸ்ரீஜனக ராஜன் திருமகளைத் தன்னிடமிருந்து பிரித்துவைத்த மகா பாபியான ராவணன் சரணம் புகுந்தாலும் அவன் அபராதத்தைப் பொறுத்து அங்கீகரிப்பதான கருத்துடன் "யதிவா ராவணஸ்வயம்"[2] என்றல்லவோ அவன் பாசுரம். ஏற்கெனவே ஸ்ரீவிபீஷணுழ்வானுக்கு லங்கா ராஜ்யத்தை முடி சூட்டியும் தண்டகாருண்ணிய வாசிகளான ருஷிகளுக்கு ராவணுதிகளை சம்ஹாரம் செய்வதாக பிரதிக்ஞை செய்தும், இவ்விதம் ஸ்ரீ ராகவன் ஸங்கல்பித்தான் என்பதை நாம் அறிவோம். ஸத்ய ஸங்கல்பனுன ஸர்வக்ஞனுக்கு உற்றவிடத்து வேண்டும் யுக்திகள், சூழ்ச்சிகள் (resources) உதிக்காது போய்விடுமோ

என்று பிரமித்தானொரு சிறியன் பாடின பாசுரம்போலக் கிடக்கிறது இவ்வேள்ளைப்பாட்டு. அதிதி சத்காரம் செய்வதாக உத்யோசித்து நிற்கும் ஒரு கிரகஸ்தன் அதிதி தோன்றினால் என் செய்வது என்று பயந்து அவன் கண்ணில் படாது வீட்டை அடைத்துத் தாளிட்டுக்கொள்வது போலன்றோ இந்தப் பாசுரத்தின் பாவம் அமைந்து கிடக்கிறது. சரணாகதி சாஸ்திரகந்தம் தெரிந்த ஒரு சாமான்யனும் இவ்விதம் எழுதத்துணியான். ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தில் பரமபத நாதனை அடைவதற்கு சுலபமான மார்க்கமாய் ஆசாரியர்களால் அறுதியிடப்பட்ட சரணாகதி சாஸ்திரத்தின் நுட்பங்களைப் பராமர்சித்துப் பசுமரத்தாணி யறைந்தாற்போன்று பாசுரமிட்ட ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீ படைத்த கல்வியிற்பெரியார் இவ்விதம் எழுதினார் என்று துணிதல் அவரிடம் பரம அபசார ஹேதுவாகுமென்பன்.

ஆனால் சிலர் இவ்விடத்தில் தோன்றுவது இளையபெருமாள் பணித்ததே யன்றி பெருமாள் வார்த்தை யில்லையே என்கிறார்கள். இது இளையபெருமானுக்கு ஒரு அவத்யம் கற்பிப்பதாகும், "தலையாய பொருளுணற்விற் கலைமகட்குந் தலைவராய்" ஞானசம்பாதனம்செய்து "பஹிர்ப்பிராண இவாபர:" என்று சொல்லும்படி பெருமாளை இணைபிரியாது நின்று அவன் கைங்கரியங்களிலே மூண்டு அவன் அநுஷ்டானங்களைத் தானும் அநுஷ்டித்துப் போந்தானொரு தர்மமூர்த்தி யன்றோ இளையபெருமாளும். அவனும் நீ சரணம் புக்கால் என் செய்வது என்று பயந்து என் தமையன் உன்னை மறைந்து நின்று கொன்றான்" என்று கூறினான் என்பது ஒருவிதத்திலும் பொருந்தாது. சரணாகதி தர்ம அநுஷ்டானத்தில் பெருமாளுக்கு இழுக்காம் வார்த்தைகளை இளையபெருமாள் வாக்கிலே போடக் கம்பர் ஒருவிதத்திலும் உடன்படார். தவிறவும் விபீஷணாழ்வான் ஸ்ரீ ராகவனிடம் சரணம் புக்கவிடத்தில் ஆக்ஷேபனைசெய்த கோடிகளில் இளையபெருமாள் சேராது நின்றது இவ்விடத்தில் ஞாபகத்திற்கு வரலாம். சிறிய திரு

வடியும் இவரும் அநுகூலபக்ஷத்திலே நின்றதாக பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்வர். சரணம் புகுந்தவர்களை பெருமாள் கைவிடாது பக்ஷத்துடன் அங்கீகரித்துக் காப்பாற்றும் அதிசயம் சத்துருக்களாலும் போற்றக் கிடக்கிறது ராமாயணத்தில்.

"அறப்பெருந் துணைவர்தம்மை யபயமென்றடைந்த உன்னைத்
துறப்பது துணியார் தம்மாருயிர் துறந்தபோதும்"

என்று கும்பகர்ணனும் கூறிப்போந்ததை திருஷ்டாந்தப்படுத்தி மேற்செல்வாம். இத்யாதி காரணங்கள் கொண்டு இவ்விரு பாடல்களும் "இடைச்செருகல்" என்றே துணியவேண்டும். எனவே, தன்னை மறைந்து நின்று வதை செய்தது மரண தண்டனையை நிறைவேற்றி யதன்பாற்பட்ட ஒரு சிறிய அம்சம் என்று தெளிந்து வாலியும் அதுசம்பந்தமாய் மறு பிரச்னை செய்யாதொழிந்தனன் என்று பெறும்படியாய் "சிறியன சிந்தியாதான்" என்று அவன் மனப்பாங்கை சுருங்க சொல்லி விளங்கவைத்தார் ராமகதையில் திளைத்தாடிய கல்வியிற் பெரியாரும். இதைத்தான் கம்பசூத்திரம் என்பர் பெரியோர்.

இதுசம்பந்தமாய் ஸ்ரீ ராகவனிடம் குறை கூறுவோர் யாவதாயுஷ—ம் அவன் அநுஷ்டித்துக் காட்டின தர்மங்களைத் தவிர்ந்து வாலிபால் நடந்துகொண்டான் என்று துணிய வேண்டிவருகிறது. முதனாள் யுத்தத்தில் நிராயுதனாய் சமஸ்த சைன்னியங்கள், படைக்கலங்கள், துணைவர்கள் நீங்கப்பெற்றவனாய் நின்ற லங்கேசுவரனை ஒரே பாணம் போட்டுக் கொல்லத்துணியாது "இன்று போய்ப் போர்க்கு நாளைவா" என நல்கினவன் நிராயுதனாய் நின்ற வாலியை மறைந்து நின்று கொல்ல ஒருப்படுவானோ என்று நாம் சந்தேசிக்கவேண்டாமா? ராவணனிடம் நிகழ்ந்தது போராதலின் அதுசம்பந்தமான தர்மங்கள் பெருமாளால் அநுஷ்டித்துக் காட்டப்பட்டன. அவற்றை

"போராண்மை யென்பதறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதெனஃகு" என்று தெய்வப்புலமை திருவள்ளுவனார் திருவாய் மலர்ந்தருளினார். வாலியினிடம் நிகழ்ந்ததுபோரன்று. அவன் "உறைவிடம் காண்பதேகுறை". கண்டவுடன் சம்ஹரிப்பதாகச் சூளுற்ற சங்கல்பத்தை நிறைவேற்றியபடி.

பெருமாள் பக்கலிலே வாலியைக்காட்டிலும் மகா அபராதம் செய்து நின்ற ராவணனையும் குற்றவாளியின்பாற் படுத்தி மறைந்துநின்று கொல்லலாகாதோ, கடுமையான போர்புரிந்து ஏன் கொல்லவேண்டும், என்று ஒரு சந்தேகம் ஜனிக்கலாம். ஸ்ரீ ராகவனுக்குளடங்காத பல காரணங்களினால் ராவணனுடன் போர் ஏற்பட்டது. அவனை ராஜ்யத்தினின்றும் சதுரங்க சைன்னியங்களினின்றும் தனியாய்ப் பிரித்துக் கொல்வதற்கு சௌகரியம் வாய்த்திலது அவ்விதம் வாய்த்திருந்தால் பிராட்டியைக் களவிற் கொண்டுபோன ஒரே குற்றத்திற்கு அவனையும் வாலியைப்போலவே outlaw வாக வைத்துப் பெருமாளும் கொன்றிருக்கக்கூடும். இதுவே அதற்கு உத்தரம் என்க.

இன்னும் சிலர் பிராட்டியிருக்குமிடத்தை நாடி ராவணனைச் சம்ஹரிப்பதற்கு சுக்ரீவனை உற்ற துணையாகக் கொள்ள நினைத்து ஸ்வகாரியதுரந்தரனாய் (political expediency) ஆக வாலியை ஸ்ரீ ராகவன் காலவிளம்பமாகும் போரைத் தவிர்த்து அவசரமாய் மறைந்து நின்று கொன்றான் என்பர். "கூட்டொருவரையும் வேண்டாக்கொற்றவ" என்று மகாவீரனும் வாலியும் ஆழங்கால்படும்படி யிறே இவன் வீரமிருப்பது. பிராட்டியைத் தேடுவதற்கு சுக்ரீவ சக்யம் ஒரு வியாஜமே என்று பொருள்படும்படியாய், "தனுவொன்றாலே, மின்னைக் கண்டனையாடன்னை நாடுதல் விலக்கற்பாற்றோ" என்று இளையபெருமாளும் கூறு நிற்பன். இது ஒருபக்கமிருக்க, சுக்ரீவனைத் தவிர்த்து தமையனைத் துணைக்கோட பிரபு துணிந்தானென்றால் வாலி ராமன் ஆணையை சிரமேற்கொண்டு மாயவரக்கனை வாலிற்பற்றி நிரசனம்செய்து பிராட்டியை ஸ்ரீ ராக

வன் திருவடிகளிலே சமர்ப்பிவித்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. ராமகாரியம் செய்ய பாக்கியஹீனனாய்ப் போன தன்மைக்கு வாலி விசனிக்கிறான். தாரையும் இவ்விபரத்தை "ராமனெறுளான், வாயால் எயினன் எனின்வாழ்வெலாம் ஈயாயோ. அமிழ்தேயுமீகுவாய்" என்று மிகவும் உருக்கமாய்ச் சுட்டிக்காட்டிக் கதறுகிறான். ஆகவே ஸ்வகாரிய துரந்தரனாய் (political expediency)ஐ உத்தேசித்து நின்றானென்றால் வாலியின் சிநேகத்தை பெருமாள் சர்வசுலபமாய்ப் பெற்றிருத்தல் கூடுமென்று ஏற்படுகிறது.

> "புயலைப்பற்றுமப் பொங்கரி போக்கியோர்
> முயலைப்பற்றுவ தென்ன முயற்சியோ"

என்று வாலியாற் காட்டப்பட்ட "shortsighted policy" என்னும் தோஷத்திற்குள்ளாகான். இதைவிட்டு யாவரும் பரிதவிக்கத்தக்க விதமாய் வாலியால் அடிபட்டு ஒளித்து வாழ்ந்துநின்ற சுக்ரீவனைக் கைப்பற்றியதொன்றுமே அவன்பால் "time server" என்ற குற்றங்கூற இடங்கொடாதென்று ஏற்படுகிறது.

ஆனால்

> "கிட்டினார் பொரக் கிடைக்கி னன்னவர்
> பட்ட நல்வரம் பாக மெய்துவான்"

என்றபடி வாலி வரம்பெற்ற காரணத்தினால்தான் அவனுடன் நேர்ப்படாது பிரபுவும் மறைந்து நின்று கொன்றான் என்பர். இவ்வானர வீரன் இவ்வரம் படைத்ததாக ஸ்ரீ வால்மீகநாதன் ஒருவிடத்திலும் கூறினாரல்லர்.

வியக்தியைக் குறிப்பிடாது சுக்ரீவன் பக்கபலத்துடன் யுத்தத்திற்கு சன்னத்தனாய் நின்று வலிந்து அறை கூவுகிற விபரம் சொல்லி அவனிடன் "யுத்தம் செய்யற்க" என்று தாரை வாலியைத் தடுக்கவும் ஏற்கெனவே அவள் தெரிந்துள்ள தன் வீரசூர பராக்கிரமங்களைப் பரக்கப்பேசி அசாதாரணமான இம்மகாவரம் தான் பெற்றிருக்கும் வாய்மை

யையும் சொல்லி தன் உயிர்த்துணையைத் தேற்றுவிக்கிறான் வாலி. அதிலும் தேறாதவளாய்

"அன்னது கேட்டவளரச வாயவற்
கின்னுயிர் நட்பமைந் திராமனென்பவன்
உன்னுயிர் கோடலுக் குடன்வந்தானெனத்
துன்னிய வன்பின் சொல்லினாரென்றான்"

என்னும்படி வியக்தியை ஸ்ரீ ராகவன் என்று குறிப்பிட்டு அவ் வீரனும் வாலியின் உயிர் கோடலில் திருஷ்டி வைத்தவனாய் துணை நின்று இங்கே எழுந்தருளியுள்ளான் என்று கூறிக் கலங்கிப் பதறினாள். இதற்கு வாலியும் பெருமாள் வைபவத்தை பிரஸம்ஸித்துப் போற்றி வானராளுக்குள் ஏற்பட்ட கக்ஷியில் இறங்கான் என்று உறுதி கூறினானேயன்றி தான் பெற்றவரத்தின் வல்லமையால் அப்பெருமாள் எதிர்ப்பட்டாலும் அவன் வரபலத்தில் பாதி தனக்கு வந்துவிடும் என்று மார் தட்டவில்லை. இவ்விஷயம் நன்றாய் கவனிக்கற்பாலது. (The omission is significant). வியக்தி பேதமின்றி எதிரியாய்வரும் எல்லா சத்துருக்களின் வரபலங்களிற் பாதி வாலியைச் சேருமென்றால் ஸ்ரீ ராகவன் விஷயத்திலும் இது பொருந்தலாமே. அவ்விதமாயின் இவ்வுயரிய நல்வர விபரம் கேட்டபின்னரும் தாரை பக்கபலாய் வந்தவன் "ஸ்ரீ ராமன்" என்று குறிப்பிட்டுச்சொல்லக் காரணங் காணோம். ஆகவே அவ்வரம் பெருமாள்பால் பலிக்குமோ என்ற சந்தேகம் இப் புண்யவதியின் மனசிற் பட்டதுபோலும். இவ்வரவுண்மையால் ஏனையர்களுக்கொப்பந்தம் ஸ்ரீ ராகவனும் தன்னால் ஜெயிக்கப்படுவான் என்று வாலி துணிந்தால் தன் திருமேனிக்கு ரகுவீரனால் அபாடம் வருவதாகப் பயந்த தாரையிடம் இதை முதலிலே போட்டுச்சொல்லித் தைரியப்படுத்த முயல்வானன்றோ. தவிரவும் இருவர்களுக்குள் சவிஸ்தாரமாய் நடந்த விவாதத்தில் மறைந்து நின்று பாணப் பிரயோகஞ் செய்த தோஷத்தைக் குறிப்பிட்டவிடங்களிலெல்லாம் பெருமாள் இவ்வர விபரம் தெரிந்து தன் வரத்தில் பாதி இவனைச்

17-ம் பக்கம் 7-வது வரி பட்டிலது. பின்

ஸ்ரீ ராகவனும் தன்னைக் கொல்ல வல்ல ஆற்றல் (Prowess) படைத்தவனே என்று வாலியும் உட்கொண்டு சம்பாஷிப்பதாகவே பாசுரங்கள் அமைந்துகிடக்கின்றன.

சேருமென்று கருதி ஒளித்து நின்றெய்ததாக வாலி எடுத்துக் காட்டினனல்லன். மறைந்து நின்று பாணப்பிரயோகம் செயப்பெறானெனின் ஸ்ரீ ராகவன் தன்னால் தோல்வியுற்றிருப்பான் என்று சொல்லவும் வாலி துணியவில்லை. தொனிப்பொருளாகக் கொள்வோமெனின் ஓரிடத்திலும் இவர்களுடைய வீரத்தின் தாரதம்மியம் வாலியாற் குறிப்பிடப் பட்டிலது. தர்ம சாஸ்திரங்களுக்கு விரோதமாய் மறைந்து நின்று பாணப்பிரயோகம்செய்த தோஷத்தையே வற்புறுத்தத் துலக்கினனேயன்றி வேறன்று. இவன் தர்ம பத்தினியாம் தாரையும் "ஓயாவாளி யொளித்துநின்றெய்ததை" அதரும வழியின்பாற்பட்டதென்று முறையிட்டனளேயன்றி இவ்வரம் பற்றி ஸ்ரீ ராகவன் வாலியால் ஜயிக்கப்பட்டிருத்தல் கூடுமென்று கொள்ளவில்லை. தவிறவும் இவ்வரவிபரங் கேட்ட பின்னரன்றோ பெருமாளும்

"உலகமேழினோ டேழும் வந்தவனுயிர்க் குதவி
விலகு மென்னினும் வில்லுடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் றாரமுமுனக் கின்றுதருவேன்"

என்று சூளுற்றது. வாலி பெற்ற இம்மகாவரம் ஒருபுறமிருக்க, பதினான்கு உலகங்களும் சேர்ந்து இவன் உயிரைத் தப்புவிப்பதற்காக சகாயமாய் வரினும் என் கோதண்டத்தின் பாணத்தினால் கொல்வேன் என்று கூறினனாக வாலி கொண்ட இவ்வரத்தை ஒருபொருட்டாக மதித்தானல்லன் என்று பெறும்படி கிடக்கிறது இப்பாசுரம். அவ்வரம் தன்னை ஒருவிதத்திலும் அசைக்கர்து என்று பிரபு நிச்சயித்தான்போலும். இப்பாசுரத்தை அடியொற்றியே, தாரையிடம் வாலி பெருமாளைப்பற்றிக் கூறும் பாசுரமும் அமைந்து கிடப்பது கவனிக்கற்பாலது

"நின்ற பேருலகெலாம் நெருக்கி நேரினும்
வென்றி வெஞ்சிலையலாற் பிறிது வேண்டுமோ
தன்றுணை யொருவரும் தன்னில் வேறிலான்"

பதினான்கு லோகங்களும் நெருக்கி எதிர்த்து வரினும் வெற்

றிக்கொடி வீசிய கோதண்டம் ஒன்றையுமே கொண்டு ஜயிக்க வல்ல ஒப்பாரை யிலேயாய அசஹாய சூரனும் ராமனுக்கு வேறொரு துணையும் வேண்டுமோ" என்று அவன் வீரத்தை வாலி மெச்சிக்கொண்டாடுகிறான் வீரர்கள அகப்படுவது வீரத்திலேயிறே. இதுவும், தான் கொண்ட வரம் ரகு வீரன் திறத்தில் பலிக்காது என்ற உட்கருத்தை வெளியிட்டதோ என்று நினைக்கும்படி யிருக்கிறது. வியவஹார ரீதிக்காக இவ்வரம் ஸ்ரீ ராமனையும் கட்டுப்படுத்தக் கூடியதென்று வைத்துக்கொண்டாலும் அவ்வானர வீரனுடன் பெருமாள் பொரக்கிட்டினால் மட்டும் வாலிக்குப் பலன்படுமேயன்றி வே'றன்று.

,, கிட்டினர் பொரக் கிடைக்கின்"
பேதை எதிர்துவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களு முரமு முள்ளதிற்
பாதியு மென்னதாற் பகைப்பதெங்ஙனம்"

என்றே பிரயோகம். பொர நினையாத விடங்களில் இவ்வரம் இவனுக்குப் பலன்றரு மியல்பினதல்ல. "The gist of the boon is to approach Vali with the intention to fight and nothing more வாலியுடன் யுத்தஞ் செய்வதாக நினைத்து அவன் அநுஷ்டானம் செய்து நின்ற தென் சமுத்திரக்கரையில் சேர்ந்து இறவு பார்த்து மறைந்து நின்று இவனைக் கட்ட எத்தனித்தவிடத்தும், பொரநினைந்த காரணத்தினால் மட்டும் ராவணன் வரபலங்களிற் பாதி வாலியைச் சேர்ந்தது என்று கவியும் காட்டியுள்ளார்.

"இரங்கியானிற்ப வென் வலியவன் வயினெய்த
வரங்கொள் வாலிபாற் றேற்றனம்" என்பது

ராவணன் வ.ர்த்தை. ஆகவே "பொர நினைந்து" இராமன் மறைந்து நின்றான் என்றால் இவன் வரபலங்களிற் பாதி வாலியைச் சேரவேண்டிய நியமமுண்டு. அதை நாம் கண்டோமில்லை எனவே ஸ்ரீ ராகவன் வாலியுடன் பொர நினைந்தவனல்லன் என்பதும் மறைந்து நின்றெய்தது யுத்தத்திலன்று

என்றும் நாம் முன்கொண்ட கொள்கையை இந்த பாவமும் வலியுறுத்தாநிற்கும். வாலி உனக்கு நான் பகையன்று என்றான். அதுவே பெருமாள் பக்ஷமும். இவனைப் பகையாக்கிப் பொரநினைந்து கொல்லவில்லை. மகா பாபி என்று கொண்டு ஸம்ஹரித்தபடி. மரண தண்டனைக்குரியானை அத தண்டனை விதிக்கும் ராஜனும் நியாயாதிபதியும் அவனுடன் பகைகொண்டு சத்துருபக்ஷத்தில் நிறுத்தி தங்கள் ஆக்ஞையை நிறைவேற்றுகிறார்கள் என்று கொள்ளல் ஒரு விதத்திலும் பொருந்தாது. உய்த்துணர்ந்துழி வாலிவதை சக்கிரவர்த்தித் திருமகன் இட்டுப்பிறந்த துஷ்ட நிக்கரகத்தின்பாற் படுமே யன்றி வேறன்று. அவ்விதம் பிரபு கைக்கொண்ட துஷ்கிருத் விநாசத்திற்கு இவ்வரம் தடை செய்யாதென்பதும் வெளிப்படை.

ஆனல் யுத்த காண்டத்தில் மந்திரப் படலத்தில் ராவணன் கூற்றாக

க "நீலகண்டனும் நேமியுநோர் நின்று நேரின்
எலுமன்னவருடை வலியவன் வயினெய்தும்
சாலு நல்வர நினைந்தவ னெதிர்செலத் தவிர்ந்து
வாலி தன்னையு மனித்தனு மறைந்து நின்றெய்தான்"

என்ற பாசுரம் பார்க்கிறோமேயெனின், விபீஷணாழ்வான் மந்திரத்தில் வாலிபால் தமையன் தோற்றதைக் குறிப்பிட்டனனாக, அதற்கு உத்தரம் கூறவந்த ராவணன் வாலி படைத்த இவ்வரத்தின் காரணமாகத்தான் தோற்றதைக்கூறி அதற்கு ஒரு ஆதரவாக (corroboration) பெருமாள் மறைந்து நின்றெய்ததைச் சுட்டிய ஒரு சத்துருவின் வார்த்தையென்று தள்ளல்வேண்டும்.

"ஊனவில்லிறுத்து ஓட்டை மாமரத்துளம் போட்டி" என்றல்லவே இவன் சத்தியம் பிறழ்ந்து கூறுவது. இவனே ராவணன் வதைப் படலத்தில் ஸ்ரீ ராகவன் ஆற்றலுக்கு வியந்து

"சிவனேவல்லன் நான்முகனல்லன் திருமாலாம்
அவனேவல்லன் மெய்வரமெல்லா மடுகின்றான்
தவனேவென்னிற் செய்துமுடிக்குந் தரனல்லன்
இவனே தானவ் வேதமுதற் காரணனென்றான்"

என்று பெருமாளைப் பற்றிய வாஸ்தவ தத்துவத்தை மிகுந்த ஆதரத்துடன் வெளியிடுகிறான். "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே[2] என்ற ஸ்காந்தபுராண வசனத்தின் கருத்தை இப்பாசுரம் தழுவிநிற்பது கவனிக்கற்பாலது. வேத வேத்யனான பரம்பொருளே சாது பரித்திராண துஷ்கிருத் விநாசத்திற்காக ஸ்ரீராகவனாய் அவதாரஞ் செய்தருளினான் என்றதை இவன் முன்னரே உணர்ந்திருந்தால் அப்பெரு மானைப்பற்றிய வசை வார்த்தைகளைக்கூற முன்னுக்கு வந் திருக்கமாட்டான் என்று நிச்சயமாகக் கொள்ளலாம்.

இக்கருத்தை உட்கொண்டே வாலியும் பரமபதம் செல் லும் தருவாயில் இதுகாறும் பரக்கப்பேசிய மகாவரம் உள்பட வரங்கள் எல்லாம் ராமபாணத்திற்கு முன் விளக்கின் முன்னிருளுண்டாமோ என்ற கணக்கில் பஸ்மீகரிக்கப்பட்டு நின்ற நிலைமையைப் போற்றி விஸ்மிதனாகிறான்.

"புரமெலா மெரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலா முருவியென் னுயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிது வேறுளதரோ தர்மமே"

என்ற பாசுரமிட்டு. "பொய்தீர்
மாதவஞ்சார்ந்த தீராவரங்களு மற்றுமுற்றும்
யாதவ னினைந்தானன்ன பயத்தன"

என்பது எழுதாமறையின் முடிபாதலின். இந்தக் காரணங்களி னால் வாலி பெற்ற இவ்வரம் காரணமாக பெருமாள் மறைந்து நின்று கொன்றான் என்று கொள்வது ஒருவிதத்திலும் பொருந்தாதென்று சொல்லி முடிக்க.

20-ம் பக்கம் 13-வது வரிக்கு பின்

எனையர்கள் திறத்தில் நிச்சயமாகக் கொல்லவல்ல
நாராயணாஸ்திரமும் இளையபெருமாள் சன்னிதியில் ஒன்
செய்யமாட்டாது பிரதக்ஷண நமஸ்காரம்பண்ணி வில
விபரத்திற்கு இந்திரசித்தே சான்று [illegible]
பாபியாகத்தோன்றுமவன் (Vice) சிலகாலம் இவ்வுலகில்
தலைதூக்கி நின்று மிகுந்த சந்துஷ்டியுடன் சமஸ்த ஐசுவரி
யங்களையும் அனுபவித்துத் திகழினும், அவன் இறுதி திடீ
ரென்று சொப்பனாவஸ்தையிலும் அவன் எதிர்பாராது நிற்கும்
சமையம் எதிர்பாராத இடங்களிலிருந்து சம்பவிக்கிறதாகக்
காட்டியுள்ளார். நம் தர்ம சாஸ்திரங்களும் இக்கொள்கையை
உடன்பாடாகக்கொண்டு பிறந்துள்ளன.

இதையனுசரித்துத்தான் வாலியின் இறுதியும் நேர்ந்
தது என்று ஊகித்தறிதல் நேர். ஆனால் அவனுக்கு மரண
தண்டனையை பெருமாள் நிறைவேற்றிய பாகம் மிகவும்
கருணையுடன் கூடினதென்று சொல்லத்தட்டில்லை. Justice
tempered with Mercy குற்றங்களுக்கேற்ற பலப்பிர
காரமாக அமைந்துள்ள சித்திரவதைக்கு அவனை உட்படுத்
தாது, கதலியின்கனியில் ஊசி நுழைந்தாலொப்ப கூர்மை
யான பாணப் பிரயோகம்செய்து பிரபு சம்ஹரித் தருளினான்.
அம்மட்டோ, தன் பவித்திரமான பாணம் அவன் மார்பில்
பிரவேசித்தது காரணமாக "கைதவமியற்றி யாண்டுங்கழிப்
பருங்கணக்கிறீமை வைகலும் புரிந்துளான்" என்று சொல்லக்
கிடந்த இவ்வானர வீரனின் மகாபாபங்களை அறவே ஒழித்து
பிராணன் போகுந்தறுவாயில் பரதேவதா பாரமார்த்திக
ஞானம் அவனுக்குத் தலைக்கட்டிவைத்து ப்பரம்பொருளாந்
தன்னை உணர்வுடன் ஸேவித்துப் பரமபதமும் கைவல்லிய
மாகும்படிக்கும் அநுக்கிரகத் தருளினான் "பற்றிநீந்தவரிய
நெடுங்கருணைக் கெல்லாம் நிலயமாம்" கோசலநாடுடை வள்
ளல். இந்த நிர்ஹேதுக கடாக்ஷத்திலே ஆழங்கால்பட்டவ
னாய் இப் பரமோபகாரத்தை ஸ்மரித்து வாலியும்

பாபியாகத்தோன்றுபவன் (Vice) சிலகாலம் இவ்வுலகில் தலைதூக்கி நின்று மிகுந்த சந்துஷ்டியுடன் சமஸ்த ஐசுவரியங்களையும் அனுபவித்துத் திகழினும், அவன் இறுதி திடீரென்று சொப்பனவஸ்தையிலும் அவன் எதிர்பாராது நிற்கும் சமையம் எதிர்பாராத இடங்களிலிருந்து சம்பவிக்கிறதாகக் காட்டியுள்ளார். நம் தர்ம சாஸ்திரங்களும் இக்கொள்கையை உடன்பாடாகக்கொண்டு பிறந்துள்ளன.

இதையனுசரித்துத்தான் வாலியின் இறுதியும் நேர்ந்தது என்று ஊகித்தறிதல் நேர். ஆனால் அவனுக்கு மரண தண்டனையை பெருமாள் நிறைவேற்றிய பாகம் மிகவும் கருணையுடன் கூடினதென்று சொல்லத்தட்டில்லை. Justice tempered with Mercy குற்றங்களுக்கேற்ற பலப்பிரகாரமாக அமைந்துள்ள சித்திரவதைக்கு அவனை உட்படுத்தாது, கதலியின்கனியில் ஊசி நுழைந்தாலொப்ப கூர்மையான பாணப் பிரயோகம்செய்து பிரபு சம்ஹரித் தருளினான். அம்மட்டோ, தன் பவித்திரமான பாணம் அவன் மார்பில் பிரவேசித்தது காரணமாக "கைதவமியற்றி யாண்டுங்கழிப்பருங்கணக்கிறீமை வைகலும் புரிந்துளான்" என்று சொல்லக்கிடந்த இவ்வானர வீரனின் மகாபாபங்களை அறவே ஒழித்து ...ாணன் போகுந்தறுவாயில் பரதேவதா பாரமார்த்திக ...னம் அவனுக்குத் தலைக்கட்டிவைத்து ப்பரம்பொருளாம் ...ன உணர்வுடன் ஸேவித்துப் பரமபதமும் கைவல்லிய...ம்படிக்கும் அநுக்கிரகத் தருளினான் "பற்றிநீந்தவரிய ...க்கருணைக் கெல்லாம் நிலயமாம்" கோசலநாடுடை வள் ... இந்த நிர்ஹேதுக கடாக்ஷத்திலே ஆழ்ங்கால்பட்டவ... இப் பரமோபகாரத்தை ஸ்மரித்து வாலியும்

பெருமாளை மங்களாசாசனம்செய்து கிருதார்த்தனாகிறான்.

ஆகவே மரண தண்டனைக்குரிய கொடிய பாபங்களைச் செய்த வாலி (outlaw) என்னும்படி நின்றனனாக, தண்டதரனாகிய ஸ்ரீ ராகவன் இவனுக்கு அத்தண்டனையை விதித்து அதைத் தானே நின்று நிறைவேற்றினான் என்பதும், இவனுடன் நிகழ்ந்தது போரன்று என்பதும், இவனை சம்ஹரித்தது யுத்தகளத்திலல்லாது கொலைக்களத்திலேதான் என்பதும். யுத்தத்திற்குரிய தர்ம சாஸ்திரங்கள் கொண்டு பிரபுவின் செய்கையை ஆராய்ச்சி செய்தல் ஒருவிதத்திலும் ஒழுங்கன்று என்பதும், மறைந்து நின்று பாணம் ஏவியதும் இவன் பெற்ற அஸாதாரணவரத்தின் காரணமாகவல்ல வென்பதும், மரண தண்டனையை நிறைவேற்றியது மறைந்து நின்றாயினும் அதுவும் குற்றத்தின் பாற்படாதென்பதும், அத்தண்டனையை பாணப் பிரயோகம்செய்து நிறைவேற்றியதன் காரணமாக இம்மகா வீரனது பாபங்களை அறவே ஒழித்து அவனுக்கு வானுயர்நிலையாம் ஸ்ரீ வைகுண்டத்தையும் பெருமாள் தலைக்கட்டிவைத்தருளினான் என்பதும், வாலிவதத்தின் திரண்டபொருள் என்று கூறி இவ்வாராய்ச்சியை முடிப்பாம்.

---

தூப்பில் வி. வி. ஸ்ரீநிவாஸாச்சாரியன்,
பி. ஏ., பி. எல்.
அட்வொகேட்

வண்ணார்பேட்டை
திருநெல்வேலி
1—2—33

17/300
600 00

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸ்—1933.

## 20-ம் பக்கம் 13-வது வரிக்கு பின்

வனையர்கள் திறத்தில் நிச்சயமாகக் கொல்லவல்ல நாராயணாஸ்திரமும் இளையபெருமாள் சந்நிதியில் ஒன் செய்யமாட்டாது பிரதக்ஷண நமஸ்காரம்பண்ணி வில விபரத்திற்கு இந்திரசித்தே சான்று பகருகிறான்.

லஞ்செய்து விசும்புஞ்செய்து நெடியவன் படை நின்றானை
லஞ்செய்து போவதானால் மற்றினி வலியதுண்டோ"

று. இதை கவனிக்குமிடத்து வாலிபெற்ற இம்மகா வரம் சக்கிரவர்த்தித் திருமகன் திறத்தில் பலிக்காது நிற்பதும் ம்பாவிதமன்றே.